**செய்தி வெளியீடு எண்.8/2019** **நாள் 08.02.2019**

**மாதவரம் மண்டலத்தில்ம் கழிவுநீர் இணைப்பிற்கான சிறப்பு முகாம் – சென்னை குடிநீர் வாரியம் ஏற்பாடு**

**–––––**

மாதவரம் மண்டலத்தில் பணிமனை–24,25,26 மற்றும் 32 பகுதிகளுக்கு உட்பட்ட, விநாயகபுரம், லட்சுமிபுரம், புத்தகரம், சூரப்பட்டு, கதிர்வேடு, கலெக்டர் நகர், பத்மாவதி நகர், கடப்பா ரோடு, டீச்சர்ஸ் காலனி ஆகிய பகுதிகளில் கழிவுநீர் குழாய் பதிக்கும் பணிகள் முடிவடைந்துள்ளது. பாதாள சாக்கடை திட்டத்தின் மூலம் அனைத்து வீடுகளும் கழிவுநீர் இணைப்பு பெற்று பயன் அடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பொதுமக்கள் தங்களது கட்டிடங்களுக்கு கழிவுநீர் இணைப்பிற்கு விண்ணப்பம் செய்து இணைப்பு பெற வசதியாக 11.02.2019 அன்று காலை 10.30 மணி முதல் நண்பகல் 1.30 மணி வரை சென்னை–60, மாதவரம், எண்:1, பெருமாள் கோவில் தெருவில் உள்ள பகுதி அலுவலகம்–3 ல் ஒரு சிறப்பு முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்கள் இந்த வசதியை பயன்படுத்தி கழிவுநீர் இணைப்பு பெறுவதற்கான விண்ணப்பத்தை பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

விண்ணப்பத்துடன் இணைப்பிற்கான தொகையை வரைவுக் காசோலையாக (Demand Draft / in favour of CMWSSB) சென்னைக் குடிநீர் வாரிய சிறப்பு முகாமில் online மூலம் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னை குடிநீர்